ந.க.வி 5/2068/09 நாள் . 7.11.09 மாவட்ட ஆட்சியரகம் ( சத்துணவு )
புதுக்கோட்டை.

<u>குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு</u>

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ் செயல்படும் ஆரம்ப/நடுநிலைப் பள்ளிகளின் சத்துணவு மையங்களுக்கு மதிப்பீடு ரூ. 12.10 லட்சத்திற்கு (1) எவர்சில்வர் கண்டைனர் மூடியுடன் 50கி.கி. அரிசி கொள்ளவு,5.000கிகி எடைக்கு குறைவில்லாமல்) (2) எவர்சில்வர் கண்டைனர் மூடியுடன் 25கி.கி. பருப்பு கொள்ளளவு,(3.750கிகி எடைக்கு குறைவில்லாமல்) (3) எவர்சில்வர் கண்டைனர் 5 கி. எண்ணெய் இருப்பு பாத்திரம் மூடியுடன் – (1.500கிகி எடைக்கு குறைவில்லாமல்), (4) எவர்சில்வர் குடிநீர் ட்ரம் நல்லியுடன் கூடியது 25 லிட்டர் கொள்ளளவு – 5.500 கிகி எடைக்கு குறைவில்லாமல், (5) எவர்சில்வர் குடம் தண்ணீர் வைப்பதற்கு 12லி. கொள்ளளவு – (1கிகி எடைக்கு குறைவில்லாமல், (6)எவர்சில்வர் ஜக், (7) எவர்சில்வர் அன்னக்கரண்டி, (8) அரிவாள்மனை (9) எவர்சில்வர் சாம்பார் கரண்டி (10) சாதம் பரிமாற எவர்சில்வர் பேசின் (11) 10'' எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர், ஆகியவை வாங்கி வழங்கிட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரால் வரவேற்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை அவர்களிடம் 30.11.09 அன்று 3.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். 30.11.09 அன்று 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் குறிப்பிட்ட படிவத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை ரூ. 500/– க்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் வங்கிக் காசோலை செலுத்தி நேரிலோ அல்லது www.pudukkottai.tn.nic.in என்ற இணையதளத்திலிருந்து எடுத்து பூர்த்தி செய்து ரூ.500 க்கான காசோலையுடன் சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் வழங்க

வேண்டிய டேவணித்தொகை மற்றும் இதர விபரங்கள் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளது.

3. மாதிரி பொருட்கள் உரிய எடை அளவுகளுடன் வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை.

# தமிழ்நாடு அரசு – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்ட மையங்களுக்கு 2008–09 ம் ஆண்டிற்கு NP-MDM திட்டத்தின் கீழ் சமையல் கருவிகள் / உபகரணங்கள் வழங்க ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளும் வரைமுறைகளும் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தபுள்ளி கோரும்அலுவலர் பெயர்/பதவி/முகவரி | : | ஆ.சுகந்தி ,இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>புதுக்கோட்டை. |
| 2. | கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் விபரம் | : | புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பள்ளிச் சத்துணவு மையங்களுக்கு சமையல் கருவிகள் / உபகரணங்கள் வாங்குதல்.<br>1. எவர்சில்வர் கண்டைனர் மூடியுடன் 50கி.கி. அரிசி கொள்ளவு–(5.000கிகிஎடைக்கு குறைவில்லாமல்)<br>2. எவர்சில்வர் கண்டைனர் மூடியுடன் 25கி.கி. பருப்பு கொள்ளவு–(3.750 கிகிஎடைக்கு குறைவில்லாமல்)<br>3. எவர்சில்வர் கண்டைனர் 5கி. எண்ணெய் இருப்பு பாத்திரம் மூடியுடன் (1.500 கிகி எடைக்கு குறைவில்லாமல்)<br>4. எவர்சில்வர் குடிநீர் ட்ரம் நல்லியுடன் கூடியது 25 லிட்டர் கொள்ளளவு (5.500 கிகி எடைக்கு குறைவில்லாமல்)<br>5. எவர்சில்வர் குடம்தண்ணீர் வைப்பதற்கு 12லி. கொள்ளளவு (1.000 கிகி எடைக்கு குறைவில்லாமல்)<br>6. எவர்சில்வர் ஜக்கு<br>7. எவர்சில்வர் அன்னக்கரண்டி<br>8. அரிவாள்மனை<br>9. எவர்சில்வர் சாம்பார் கரண்டி<br>10. சாதம் பரிமாற எவர்சில்வர் பேசின்<br>11. 10’எவர்சில்வர்தட்டு, எவர்சில்வர் டம்ளர் |
| 3. | ஒப்பந்தபுள்ளி கொடுக்கப்பட வேண்டிய முறை | : | மேலே குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் எடை அளவுகளின் அடிப்படையில் சமையல் கருவிகள் / உபகரணங்கள் ஒன்றின் விலையை குறிப்பிட்டு அவற்றின் மாதிரி ஒன்றுடன் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.pudukkottai.tn.nic.in என்ற இணைய தளத்திலிருந்து எடுத்து பூர்த்தி செய்து ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் ரூ. 500/– மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் வங்கிக் காசோலையாக எடுத்து இணைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் நேரில் காசோலையினை வழங்கி விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம். |

| | | | |
|---|---|---|---|
| 4. | செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை விபரம் | : | “மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை” என்ற முகவரிக்கு ரூ.12,100/—க்கான, தேசிய வங்கிகளில் பெற்ற வங்கி வரைவு. |
| 5. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தபுள்ளி கொடுப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம். | : | 30 .11.09 பிற்பகல் 3.00 மணி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (சத்துணவு), புதுக்கோட்டை. |
| 6. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடம், நாள் மற்றும் நேரம் | : | இடம்: மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (சத்துணவு), புதுக்கோட்டை.<br>நேரம்: பிற்பகல் 3.30 மணி<br>நாள்: 30.11.2009 |
| 7. | ஒப்பந்தபுள்ளி பொருத்தமானது என்று தீர்மானிக்கும் முக்கிய தகவல்கள் | : | எக்காரணமும் தெரிவிக்கப்படாமல்<br><br>1) ஒப்பந்தபுள்ளியை ஒத்திவைக்கவோ அல்லது நிராகரிக்கவோ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.<br>2. ஒப்பந்தபுள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை அவர்களாலோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் அலுவலராலோ திறக்கப்படும்.<br>3) குறிப்பிட்ட தரம் மற்றும் அளவுகள் இல்லாத சமையல் கருவிகள் / உபகரணங்கள் ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட மாட்டாது.<br>4) முன்வைப்புத் தொகைக்கான வங்கி வரைவு இல்லா விலைப்புள்ளிகள் ஏற்கப்பட மாட்டாது.<br>5) ஒரே நபரால் அளிக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தபுள்ளி நிராகரிக்கப்படும்.<br>6) ஒப்பந்தபுள்ளியில் அளிக்கப்படும் விலை விபரத்தில் விற்பனைவரி மற்றும் சர்சார்ஜ், இன்சூரன்ஸ், லாரி கட்டணம், ஏற்றுக்கூலி:இறக்குக்கூலி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சேர்ப்பிப்பதற்கான போக்குவரத்து கட்டணம் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளதா? என்ற விபரமும் குறிப்பிட வேண்டும். இல்லையெனின் ஒப்பந்தபுள்ளி நிராகரிக்கப்படும்.<br>7) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தபுள்ளிதாரர் ஆணை வழங்கப்பட்ட இருவார காலத்திற்குள் குறிப்பிட்ட சமையல் கருவிகள் / உபகரணங்கள் குறிப்பிட்ட இடத்தில் மாதிரியின்படி நல்ல நிலையில் ஒப்படைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | 8) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் உத்திரவு பெற்ற ஒரு வாரத்திற்குள் மாவட்ட ஆட்சியரின் நிபந்தனைக்குட்பட்டு பொருட்களை விநியோகம் செய்வதற்கான ரூ.100/— மதிப்புள்ள ஒப்பந்தப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.<br>9) அவ்வாறு ஒப்படைக்கத் தவறும் போது ஒப்பந்தபுள்ளி முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படுவதோடு முன்வைப்புத் தொகையும் திருப்பித் தரப்படமாட்டாது.<br>10) சமையல் கருவிகள் மற்றும் உபகரணங்கள் சப்ளை செய்யப்படும் பட்டியலின் மொத்தத் தொகையில் 5% வைப்புத்தொகை மற்றும் 4% வாட் வரி மற்றும் இதர வரிகள் பிடித்தம் செய்யப்படும்.<br>11) ஏற்றுக் கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளியின் முன்வைப்புத் தொகை சமையல் கருவிகள் / உபகரணங்கள் சப்ளை செய்யப்பட்டு அவற்றின் தரம் மற்றும் உழைப்புத்திறன் திருப்தி அளிக்கப்பட்டால் மட்டுமே திருப்பி அளிக்கப்படும்.<br><br>12) ஒப்பந்தபுள்ளியின் மொத்த வியாபாரிகள் என்பதற்கான விற்பனைவரி பதிவு சான்று (Sales Tax Registration Certificate) மற்றும் தொழில் உரிமச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>13) சொத்து மதிப்புச்சான்று மற்றும்<br><br>14) கடைசி மூன்று வருடங்களுக்கான வருமான வரி மற்றும் விற்பனைவரி பாக்கியின்மை சான்று இணைக்க வேண்டும்.(IT and ST clearance certificate) மேலும் இதர விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களை அலுவலக நேரத்தில் அணுகலாம். |

மாவட்ட ஆட்சித் தலைவர்.
புதுக்கோட்டை.

**2008–09 ஆம் ஆண்டிற்கான சமையல் கருவிகள் / உபகரணங்கள்வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி**

அனுப்புநர்:

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியரகம்,
புதுக்கோட்டை.

அய்யா,

பொருள்: ஒப்பந்தப்புள்ளி – 2008–09ம் ஆண்டிற்கு சமையல் கருவிகள் / உபகரணங்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் – விலைப்புள்ளி கொடுத்தல் – சம்மந்தமாக.

பார்வை: மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க. வி5(சஉதி) 2068/09 நாள் .10.09

– – –

நான் இத்துடன் 2008–09ம் ஆண்டிற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்ட மையங்களுக்கு தேவையான சமையல் கருவிகள் / உபகரணங்கள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்கிறேன். வழங்கப்பட உள்ள சமையல் கருவிகள் / உபகரணங்களுக்கான குறைந்தபட்ச விலையை குறிப்பிட்டுள்ளேன்.

நான் இந்த ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் வரைமுறைகளையும் எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி ஏற்றுக் கொள்கிறேன். என்னுடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படின் ஒப்பந்தப்பத்திரத்தை எழுதித் தர நான் சம்மதிக்கிறேன்.

இடம்: தங்கள் உண்மையுள்ள,
நாள்:

சாட்சி பெயரும், முகவரியும்:

**<u>2008 – 09 ம் ஆண்டிற்கு சமையல் கருவிகள் / உபகரணங்கள் (Cooking equipments / devices) வழங்க ஒப்பந்தப்புள்ளியுடன் கொடுக்கப்பட வேண்டிய விவரங்கள்.</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒப்பந்தக்காராின் பெயர் மற்றும் நிறுவனத்தின் விலாசம் | : | |
| 2 | ஒப்பந்தப்புள்ளியில் உறைமீது மூடி முத்திரையிடப்பட்டுள்ளதா? | : | |
| 3 | ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை செலுத்தப்பட்டுள்ளதா? | : | |
| 4 | டேவணித் தொகை செலுத்தப்பட்டுள்ள வங்கி வரைவு எண்/தேதி மற்றும் வங்கியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். | : | |
| 5 | வழங்கப்பட உள்ள சமையல் கருவிகள் / உபகரணங்கள் மாதிரி கொடுக்கப்பட்டுள்ளனவா? | : | |
| 6 | சமையல் கருவிகள் / உபகரணங்கள் 10 நாட்களுக்குள் வழங்க இயலுமா? | : | |
| 7 | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் நபாின் பெயரும் விலாசமும் | : | |

மேலே கொடுத்துள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை, அதில் ஏதேனும் தவறு இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகாிக்கப்படும் என்பதை அறிந்து கொள்கிறேன்.

கையொப்பம்.